**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு.S.ஜான் சுந்தர்லால் சுரேஷ் , B.Sc.,M.L.,

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

மதுரை.

**2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாள் திங்கட்கிழமை**

**அமர்வு வழக்கு எண். 181/2023**

CNR No.TNMD010037412023

---

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர், தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.618/2022 |
| குற்றஞ்சாட்டப் பட்டவரின் பெயர் | : | முருகேசன், (35/2022)<br>த/பெ சுப்பு ஆசாரி |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச. பிரிவு 436–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | இவ்வழக்கின் எதிரி இ.த.ச. பிரிவு 436 –ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவாக, எதிரி இ.த.ச.பிரிவு 436 –ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. |

| | | |
|---|---|---|
| | | 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>மேலும் எதிரி வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக இன்று 10.08.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.R.செந்தில் பிரபாகர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் Legal Aid Defence Counsel திரு.S.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்புரை

## <u>வழக்கு சுருக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் எதிரி முருகேசன் 19.11.2022 முதல் 21.02.2024 வரை = 460 நாட்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | வழக்கு விசாரணையின் போது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாததால், எதிரி மீது கடந்த 22.08.2024 தேதி பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டு, அதனை நிறைவேற்றும் பொருட்டு, எதிரி கடந்த 04.07.2026ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு, இன்று வரை அதாவது 10.08.2026ம் தேதி வரை 38 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளார்.<br>மொத்தம் =498 நாட்கள் |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 20.01.2023 |
| 3. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 21.03.2023 |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 13.07.2026 |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| | | அ.சா.1 | 04.08.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 04.08.2026 | இல்லை |
| | | அ.சா.3 | 07.08.2026 | 07.08.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 10.08.2026 | | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை | | |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை | | |

## தீர்ப்புரை

**2**. அரசு தரப்பு வழக்கானது, வாதியின் அத்தை பஞ்சவர்ணம் என்பவருக்கு சொந்தமான வீடு பழைய குயவர் பாளையம், பாலகிருஷ்ணன் அய்யர் சந்தில் உள்ளது என்றும், வாதியின் அத்தை பஞ்சவர்ணம் இறந்துவிட்ட நிலையில் அந்த வீட்டின் முன்புற காலி இடத்தில் மட்டும் கார் மற்றும் இருச்சக்கர வாகனத்தை நிறுத்துவதற்கு பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும், கடந்த 13.11.2022ம் தேதி காலை சுமார் 05.45 மணியளவில் அந்த

பகுதியில் கூலி வேலை பார்த்து சுற்றித்திரியும் எதிரி முருகேசன் பீடியை குடித்து அதை அணைக்காமல் அப்படியே பஞ்சவர்ணத்தின் வீட்டுக்குள் தூக்கி எறிந்துள்ளார் என்றும், அதனால் வீட்டில் கிடந்த கம்பி மத்தாப்புக்கள் உள்ளிட்ட வெடிகள் வெடித்து தீப்பிடித்து எறிந்ததற்கான குற்றம் புரிந்துள்ளார் என்றும் எனவே எதிரி இ.த.ச.பிரிவு 436–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் விளைவித்ததாக தெப்பக்குளம் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3**. இந்த வழக்கினை நீதித்துறை நடுவர் எண்.1, மதுரை அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.95/2023 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி வழங்கப்பட வேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.181/2023 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

**4**. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து

குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால், 13.07.2026 ம் தேதி எதிரி மீது இ.த.ச. பிரிவு 436—ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றவாளி இல்லை என்று குற்றத்தை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**5**. இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணைங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சார்பு ஆய்வாளர் அ.சா.3 திரு.சுந்தரபாண்டியன் என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 13.11.2022—ம் தேதி தான் தெப்பக்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அழகுராணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சாஆ.1 புகாரின் அடிப்படையில் அதன் தன்மைக்கேற்ப தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.618/2022 இ.த.ச.பிரிவு 436 —ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.2 என்றும், கடந்த 13.11.2022—ம் தேதி காலை 11.00 மணியளவில் சம்பவ இடம்

சென்று சாட்சி எண்.5 அஜய் மற்றும் சாட்சி எண்.6 லட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் அ.சாஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சாஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், சம்பவ இடத்தை சோதனையிட்டு தகுந்த அறிக்கை வழங்குமாறு தடய அறிவியல் துறைக்கு காவல் ஆய்வாளர் அவர்களால் கடந்த 13.11.2022–ம் தேதி கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அந்த கடிதத்தின் அடிப்படையில் தடய அறிவியல் துறையால் அ.சாஆ.5 அறிக்கை வழங்கப்பட்டது என்றும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், கடந்த 19.11.2022ம் தேதி 15.00 மணிக்கு எதிரியை அவரது வீட்டின் அருகே காரணம் கூறி கைது செய்ததாகவும், பின்னர் எதிரியை காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்து, எதிரியை அன்றைய தினமே தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது தெப்பக்குளம் காவல் நிலைய குற்ற எண்.618/2022 இ.த.ச. பிரிவு 436 IPC–ன் கீழ் 20.11.2022–ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**7.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்வி கேட்க எதிரி பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**8.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச.பிரிவு 436–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9 . பிரச்சனை** :

அரசுத்தரப்பு வழக்கானது, கடந்த 13.11.2022ம் தேதி காலை சுமார் 05.45 மணியளவில் அந்த பகுதியில் கூலி வேலை பார்த்து சுற்றித்திரியும் எதிரி முருகேசன் பீடியை குடித்து அதை அணைக்காமல் அப்படியே பஞ்சவர்ணத்தின் வீட்டுக்குள் தூக்கி எறிந்துள்ளார் என்றும், அதனால் வீட்டில் கிடந்த கம்பி மத்தாப்புக்கள் உள்ளிட்ட வெடிகள் வெடித்து தீப்பிடித்து எறிந்ததற்கான குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும்.

**10**. அரசு தரப்பு அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர், இந்த வழக்கில் அ.சா.1 அழகுராணி என்பவர் கடந்த 13.12.2022ம் தேதி 10.00 மணிக்கு தெப்பக்குளம் காவல் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 புகாரின் அடிப்படையில் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, எதிரி மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு

அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**11**. இவ்வழக்கின் எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் இந்த வழக்கு சம்பவம் குறித்து புகார் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.1 அழகுராணி என்பவர் வழக்கு சம்பவத்தை பார்த்ததாக சாட்சியமளிக்கவில்லை என்பது மட்டுமின்றி அ.சா.2 முத்துப்பாண்டி தனது மனைவி மற்றும் அக்கம்பக்கத்தில் இருந்த நபர்கள் பார்த்து தீயை அணைத்துவிட்டார்கள் என்றும், அந்த சம்பவத்தில் தங்களுக்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் எதிரி மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**12**. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கானது, கடந்த 13.11.2022ம் தேதி காலை சுமார் 05.45 மணியளவில் அந்த பகுதியில் கூலி வேலை பார்த்து சுற்றித்திரியும் எதிரி முருகேசன் பீடியை குடித்து அதை அணைக்காமல் அப்படியே பஞ்சவர்ணத்தின் வீட்டுக்குள் தூக்கி எறிந்துள்ளார் என்றும், அதனால் வீட்டில் கிடந்த கம்பி மத்தாப்புக்கள் உள்ளிட்ட வெடிகள்

வெடித்து தீப்பிடித்து எறிந்ததற்கான குற்றம் புரிந்துள்ளார் என்பதாகும். இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 அழகுராணி மற்றும் அ.சா.2 முத்துப்பாண்டி ஆகியோர்கள் தங்கள் முதல் விசாரணையில், தீயை அணைத்துவிட்டதாகவும், அந்த சம்பவத்தில் தங்களுக்கு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளனர் என்பது மட்டுமின்றி, வழக்கு சம்வத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சி எண்.4 லெட்சுமி என்பவர் மூத்த குடிமகளாக இருப்பதாலும், வீட்டோடு படுத்த படுக்கையாக இருப்பதாலும் அவரை ஆஜர் செய்ய இயலவில்லை என்றும், அதனால் ஏற்படும் சட்ட விளைவுகளுக்கு தாங்களே பொறுப்பு என்றும் காவல் துறையினரால் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அ.சா.3 சார்பு ஆய்வாளர் திரு.சுந்தரபாண்டியன் அவர்கள் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாக சாட்சிமளித்திருந்தாலும், இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப் பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, எதிரி இ.த.ச.பிரிவு 436 –ன் கீழ் குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் எதிரி வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 18:46:00 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.அழகுராணி |
| அ.சா.2 | திரு.முத்துப்பாண்டி |
| அ.சா.2 | திரு.சுந்தரபாண்டியன், சார்பு ஆய்வாளர், தெப்பக்குளம் காவல்நிலையம் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.11.2022 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 13.11.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 13.11.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 13.11.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 13.11.2022 | தடயவியல் அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u> :-** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :** இல்லை

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.08.10 18:46:07 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை